நீலகிரி மாவட்டம் , கூடலூர் அரசு மருத்துவமனையை ரூ. 31 கோடி மதிப்பீட்டில் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்த அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் , மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்ரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அரசுத்துறை அலுவலர்கள், மாவட்ட ஊராட்சி தலைவர் மு.பொன்தோஸ் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட, நகர, ஒன்றிய கிளை கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

காலைச் சிற்றுண்டி மாணவர்களுக்கு வழங்குவதன்மூலம்

வயிற்றுப் பசி, அறிவுப் பசியைப் போக்கும் 'திராவிட மாடல்' அரசு!

அண்ணா பிறந்த நாளில் குடும்பத் தலைவிக்கு ரூ.1000 வழங்கும் அருமையான பெருந்திட்டம்!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை

சென்னை,செப்.15-

அறிஞர் அண்ணா பிறந்த 115 ஆம் ஆண்டு பிறந்த நாளில் (செப்டம்பர் 15) குடும்பத் தலைவிக்கு மாதம் ஆயிரம் ரூபாய் அளிக்கும் திட்டம் பொருத்தமானதும், வரவேற் கத்தக்கதுமாகும் என்று திரா விடர் கழகத் தலைவர் ஆசிரி யர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

இன்று (15.9.2023) அறிஞர் அண்ணாவின் 115 ஆவது பிறந்த நாள். தந்தை பெரியா ரின் தலைமாணாக்கர் அறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா நாயகர் முத்தமிழறிஞர் கலை ஞரின் அரசியல் வழிகாட்டி அறிஞர் அண்ணா. அவர்தம் பிறந்த நாளில் 'திராவிட மாடல்' ஆட்சியின் ஒப்பற்ற முதலமைச்சர் சமூகநீதிக்கான சரித்திர நாயகர் மு.க.ஸ்டாலினின் இரண் டாண்டு ஆட்சி நிறைவில், அதன் மகுடத்தில் மற்றுமோர் சாதனை முத்து, தகத்தகாய ஒளியுடன் பதிக்கப்படுகிறது திராவிடர் ஆட்சியின் திரா விட நாயகரால்.

நீதிக்கட்சியின் சாதனை!

திராவிடர் இயக்கம், நீதிக் கட்சியாக மக்களால் அழைக் கப்பட்ட, தென்னிந்திய நல உரிமைச் சங்கம் (South Indian Liberal Federation) கூட்டமைப்பு இயக்கம் 1916 இல் தொடங்

கப்பட்டு, மூன்றே ஆண்டுக ளில் ஆட்சியைப் பிடித்து, பொறுப்பேற்றபோது, அதற் குள்ள குறுகிய அதிகார வரம் புக்குள்ளேயே, ஒடுக்கப்பட்ட சமூகத்தவரின் 'கல்வி, உத்தி யோகம்' இவற்றிற்கு முன்னு ரிமை தந்து வருண தர்மத்தின் வேரறுத்தனர்!

பெண்களும் 'நமோ சூத்தி ரர்கள்' என்று ஆரியத்தால் 'நாம கரணம்' சூட்டப்பட்டு, கல்வி, உத்தியோகம், சமத்து வம், சம வாய்ப்பு மறுக்கப் பட்டு, "நல்ல அடிமைகளாக" வைக்கப்பட்டு வந்த கொடுமை தொடர்ந்தது!

அத்தகையவர்களுக்கு சமூக நீதியைத் தங்களது ஆட்சியில் ஆண் பெண் பேதமின்றி கல்வி, உத்தியோக வாய்ப்பில் தந்ததோடு, இந்தியாவிலேயே எந்த மாநிலத்தில் இல்லாத அளவுக்கு முதன்முதலில் 21 வயது வந்த பெண்களுக்கு வாக்குரிமை தந்து, அதிகாரப் பங்களிப்பு (Empowerment) ஏற்ப டுத்தினர்.

பெண்களுக்குப் பொருளாதா ரத்திலும் சுதந்திரம்!

பெண்களுக்குப் பொருளா தார சுதந்திரமும் ஏற்பட்டால் தான் அவர்தம் உரிமைகள் அங் கீகரிக்கப்பட்டு, தன்மானத்தோடு, தன்னிறை வும் ஏற்படும் என்றார் தந்தை பெரியார்!

தனது சுயமரியாதை இயக் கத்தின் முதலாம் மாகாண மாநாடு 1929 ஆம் ஆண்டு செங்கற்பட்டில் நடைபெற்ற போது, "மகளிருக்கு சமத்துவ மும், சம வாய்ப்பும், சம உரி மையும் கல்வி, வேலை வாய்ப்பில் ஏற்படுத்துவதோடு, தகப்பன் சொத்தில் மகனைப் போலவே, மகளுக்கும் சம உரி மையும், பாத்தியதையும் தர வேண்டும்" என்றார்!

1989 இல் மீண்டும் தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோது, முத்தமி ழறிஞர் கலைஞர் பெண்களுக் குச் சொத்துரிமை வழங்கு வதை சட்டமாக்கினார் (1989). படிப்புரிமை, அரசுப் பணி உரிமை இப்படி எல்லாம் திரா விடர் ஆட்சியின் தெவிட்டாத தேன்கனி போன்ற சாதனை கள். அவ்வாட்சி வரும்போ தெல்லாம் தமிழ்நாட்டு மக்க ளுக்குக் கிடைத்துக் கொண்டே உள்ளது!

தி.மு.க. கடந்த தேர்தல் அறிக்கையில் சொன்னதைச் செய்வதோடு, சொல்லாத பல சாதனைகளையும் செய்து "மலைமீது வைக்கப்பட்ட மகர விளக்காய்" ஒளியூட்டுகி றது நிதி நெருக்கடி நிதி நெருக் குதல் இடையிலும் இப்படி ஒரு மகத்தான சாதனை!

நமது முதலமைச்சர் பொறுப்பேற்ற நாள் அன்றே, மகளிருக்கு இலவச பேருந்து பயணம் என்று கொடுத்து, இன்ப அதிர்ச்சியைத் தந்தார்; அன்றாட வேலைக்குச் செல் லும் ஏழை மகளிருக்கு இது ஒரு பொருள் சேமிப்புத் திட் டமாகியது!

உள்ளாட்சித் தேர்தலில் பெண்களுக்கு 50 விழுக்காடு இட ஒதுக்கீடு!

உள்ளாட்சிகளில் அவர்கள் கேட்காமலேயே மகளிருக்கு 50 விழுக்காடு ஒதுக்கீடு தரப் பட்டது.

அந்த சாதனை வரிசையில் இன்று (15.9.2023) முதல் வீடு தோறும் இல்லத்தரசிகளைத் தேடி, மாதம் ஆயிரம் ரூபாய் அவர்தம் வங்கிக் கணக்கில் தானாகவே சென்று 'பொத்' தென்று விழும் திட்டம் செயல் வடிவம் பெற்று, அண்ணாவின் பிறந்த ஊரான காஞ்சியில் "கலைஞர் மகளிர் உரிமைத் தொகை" வழங்கும் விழா நடைபெறவிருக்கிறது. இது சாதாரண நிகழ்வல்ல; சரித்தி ரம் காணா அரிய சாதனை!!

மாதம் 1000 ரூபாய் திட்டத் தில் பயனடையும் குடும்பத் தலைவிகள் ஒரு கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் பேர். இத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு 12 ஆயிரம் கோடி ரூபாய் மெகா திட்டம்!

மற்ற மாநிலங்கள் வாய் பிளந்து பார்ப்பதோடு, இதையே இனி தேர்தல் வாக் குறுதியாக ஆக்க முனைப்புடன் யோசிக் கின்றன!

ஏற்கெனவே குடும்பத்தில் கல்லூரியில் படிக்கும் மகளி ருக்கு மாதந்தோறும் 1000 ரூபாய் சென்று கதவைத் தட்டு கிறது!

இப்படி தாயும், மகளும் பெறும் மகிழ்ச்சியைத் தருவது ஒப்பற்ற 'திராவிட மாடல்' ஆட்சியல்லவா?

அதன் ஆளுமைமிகு மான மிகு மாண்புமிகு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அல்லவா?

காலைச் சிற்றுண்டிமூலம் பள்ளியில் படிக்கும் குழந்தை கள் குடும்பத்துத் தாயின் பளு வைக் குறைத்துவிட்டது.

வயிற்றுப் பசி, அறிவுப்பசி போக்கிய 'திராவிட மாடல்' அரசு

தலை வாரிப் பூச்சூட்டி குழந்தைகளைப் பாடசா லைக்கு அனுப்பினால் போதும். காலைச் சிற்றுண்டி நம் குழந்தை மாணவர்களை குதூகலத்துடன் வரவேற்றுப் பசி போக்கிட, ஆயத்தமாகி அறிவுப் பசி போக்கும்முன் வயிற்றுப் பசி போக்கவும் முனைந்துவிட்டது.

"கலைஞர் மகளிர் உரிமைத் தொகை" இது வறுமை ஒழிப் புத் திட்டம் மட்டுமல்ல, ஆணாதிக்க சமூகத்தையே மாற்றி அமைக்கும் அமைதிப் புரட்சித் திட்டமுமாகும்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தமது அறிக்கையில் தெரிவித்துள் ளார்.

தமிழ்நாட்டில்

முகக்கவசம் அணிவது கட்டாயம்!

சென்னை,செப்.15-

தமிழ்நாட்டில் டெங்கு காய்ச்சல் தீவிரமடைந்து வரு வதால் பொது மக்கள் முகக்க வசம் அணிந்து வெளியே செல் லுமாறு பொது சுகாதாரத் துறை வலியுறுத்தியுள்ளது. அண்மைக் காலமாக காய்ச்சல், சளி, தொண்டையில் ஏற்படும் கிருமித் தொற்று உள்ளிட்ட பாதிப்புகளுடன் மருத்துவம னைகளை நாடுவோரின் எண் ணிக்கை அதிகரித்து வருகிறது.

காய்ச்சல் ஏற்படின் மருத்து வரை அணுகவேண்டும். அதை விடுத்து சுயமாக மருந்து மாத் திரைகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

அதேபோன்று தீவிர பாதிப் புக்குள்ளானவர்களை அதீத கவனத்துடன் கையாள வேண் டும். மூச்சுத் திணறல், ரத்த அழுத்தம் குலை, சீரற்ற இத யத்துடிப்பு, வலிப்பு, சிறுநீர் அளவு உள்ளிட்ட பாதிப்புக ளுக்கு உள்ளானோரை மருத் துவப் பரிசோதனைக்குட்ப டுத்த வேண்டும். அதே வேளையில் சுகாதாரக் களப் பணியாளர்கள் முகக்கவசம் அணிதல் கட்டாயம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயேசு பெருமான் !

உலக மக்களிடையே உண்மை யான அன்பு, அறம்,இரக்கம், பொறுமை முதலான பண்பு நலன் களைப் பரப்ப வந்தார் ஒரு வழி காட்டிப் பெருவிளக்கு !

தனக்குக் கடுகளவு தீமை செய்த வனுக்கும் மலையளவு தீமை செய்து பழிவாங்கும் கொடிய இயல்பை விட்டொழித்து, துன்பம் இழைத்தவனுக்கும் நன்மை புரியுமாறு அறிவுறுத்திய மாபெ ரும் அறவாணர் அவரே !

பல்வேறு தெய்வங்களை வழிபட்டு மூட நம்பிக்கைகளில் முடங்கிக் கிடந்த மக்களிடையே ஒரே கடவுள் தத்துவத்தை முதன் முதல் முழங்கியவர் அவரே !

நீதிநெறியை - அறவழியைப் போற்றி நடப்பவரே உண் மையான கடவுளின் மைந்தர் ஆக முடியும் என்று மக்களை நல்வழிப் படுத்திய மனித மாமருந்தும் அவரே !

அவரே பொறுமைப் பண்பின் இலக்கணமாக வாழ்ந்த இயேசு கிறித்து ஆவார் !

- பேரறிஞர் அண்ணா

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை!

அம்பத்தூர் தெற்கு பகுதி கழகம் சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்!

டி.எஸ்.பி.ராஜகோபால் தலைமை! நடிகர் - இயக்குனர் டி.ராஜேந்தர், பாரதி கிருஷ்ணகுமார் சிறப்புரை!

சென்னை, செப்.15-

சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் தெற்கு பகுதியில் கலைஞர் 100 35வது நிகழ்ச்சியாக நல் லிணக்க நாயகர்! நம்மினத் தின் செஞ்சுடர்!! எனும் தலைப்பில் 16.09.23 சனிக்கி ழமை அன்று மாலை 6.00 மணியளவில் சென்னை 50 யாதவாள் தெரு பாடியில் நடைபெறுகிறது.

இப்பொதுக் கூட்டத்தில், அம்பத்தூர் தெற்கு பகுதி செயலாளர் பெரு நகர சென்னை மாநக ராட்சி மன்ற துணைத் தலைவர் டி.எஸ்.பி.இராஜ கோபால் எம்.சி. தலைமை வகிக்கிறார். கழக பொரு ளாளர் நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர்.பாலு எம். பி., சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர் பாபு எம்.எல்.ஏ., அம்பத் தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல் எம். எல்.ஏ. வடக்கு பகுதி செய லாளர், 7வது மண்டலக் குழுத் தலைவர் பி.கே. மூர்த்தி எம்.சி., அம்பத்தூர் கிழக்கு பகுதி செயலாளர் எம்.டி.ஆர்.நாகராஜ், எல். பி.எப்.மோகன், டாக்டர் ஏபி பூர்ணிமா எம்.சி., டாக் டர் ஜி.சாந்தகுமாரி எம்.சி., வி.ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி., ஜெ.பாலமுருகன், ஜி.வி.நாகவல்லி எம்.சி., கு.கிருஷ்ணமூர்த்தி, து.ஆயி ரம், து.சம்பத்குமார், அம் பத்தூர் தெற்கு பகுதி கழக நிர்வாகிகள் : மு.நடராஜன், து.செல்வராஜ் ஆர்.கதிர வன் கவிதாசெல்லதுரை, கு.சங்கர், அம்பத்தூர் தெற்கு பகுதி வட்டக் கழக செயலாளர்கள் : சி.சீனிவா சன், எம்.இ.சேகர் எம்சி, நா.நெப்போலியன், இரா. டீக்கா, ஆகியோர் முன் னிலை வகிக்கின்றனர். பொ.சேதுராமன் (எ) பொன் சேட்டு, ஏ.கே. டி.பாஸ்கர், பா.மாறன் டி.சுரேஷ் பாபு, ஆர்.ஜெய ராமன், சோ.மதியழகன், எஸ்.கே.சதீஷ்குமார், எஸ். எஸ்.சவரிமுத்து, எஸ்.எம். முருகானந்தம், ஏ.வி.தட்சி ணாமூர்த்தி ஆகியோர் வர வேற்கின்றனர்.

இப்பொதுக் கூட்டத்தில் நடிகர் இயக்குனர் டி. ராஜேந்தர், பாரதி கிருஷ்ண குமார் சிறப்புரையாற்றுகின்றனர். மேலும் இவ்விழாவில் மேயர் பிரியா ராஜன், ப.தாயகம் கவி எம்எல்ஏ, அ.வெற்றி அழகன் எம். எல்.ஏ. ஆகியோர் பங் கேற்று சிறப்பிக்கின்றனர். 87 வது வட்டக் கழகச் செய லாளர் பிரகாஷ் குமார் நன்றி கூறுகிறார்.

மருத்துவர்கள் - செவிலியர்களுக்கான

ஒருங்கிணைந்த போதை மீட்பு பயிற்சி துவக்கம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் கையேடுகள் வழங்கினார்!

கோவை,செப்.15-

மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கான ஒருங்கி ணைந்த போதை மீட்பு மற் றும் பின் பேறுகால தாய்சேய் மனநலம் பேணுவதற்கான பயிற்சியை மருத்துவம் மற் றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைத்து, மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு பயிற்சி கையேடுகளை வழங்கி னார்.

கோயம்புத்தூர் மாவட் டம், வால்பாறை நகராட்சி, சமுதாய நலக்கூடத்தில் நேற்று (14.09.2023) மருத்துவர்கள் மற் றும் செவிலியர்களுக்கான ஒருங்கிணைந்த போதை மீட்பு மற்றும் பின் பேறுகால தாய் சேய் மனநலம் பேணுவதற் கான பயிற்சியை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் துவக்கி வைத்து, போதை மீட்பு கையேடு, பின் பேறுகால தாய் சேய் மனநலக் கையேடு ஆகிய பயிற்சி கையேடுகளை மருத்து வர்கள் மற்றும் செவிலியர்க ளுக்கு பயிற்சி கையேடுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் கிராந்தி குமார் பாடி கீழ் பாக்க மனநல மருத்துவமனை இயக்குநர் மரு.ம.மாலையப்பான், பொது சுகாதாரம் மற்றும் நோய்த டுப்பு மருந்துத்துறை இயக்கு நர் மரு.டி.எஸ்.செல்வ விநாய கம், பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துதுறை கூடுதல் இயக்குநர் மரு.சி. சேகர், பொள்ளாச்சி சார் ஆட் சியர் திருமதி.சி.பிரியங்கா துணை இயக்குநர் (சுகாதாரப ணிகள்) மரு.அருணா, உதவி ஆட்சியர் (பயிற்சி) பி.ஐ ஆஷிக் அலி , வால்பாறை நகர்மன்ற தலைவர் திருமதி.செ.அழகு சுந் தரவள்ளி, துணைத்தலைவர் த.மா.செந்தில்குமார், வால் பாறை வட்டார மருத்துவ அலுவலர் மரு.ர.ரமேஷ் மற் றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து, வால்பாறை அரசு மருத்துவமனை ரூ.9கோடி மதிப்பீட்டில் கட் டப்பட்டு வரும் கூடுதல் கட்டி டத்தை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொ ண்டு, மருத்துவம னையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளிடம் அங்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்து கேட்டறிந்தார். மேலும், பெரியபோது மேம்ப டுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடை பெற்ற நிகழ்ச்சியில் மதுக்கரை வட்டாரம், அரிசிபாளையம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வட்டார சுகாதார அலகு கட்டடம், ஆனைமலை வட்டாரம், பெரி யபோது மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலை யத்தில் ரூ.50 இலட்சம் மதிப் பீட்டில் கட்டப்பட்டுள்ள வட் டார சுகாதார அலகு கட்டடம், கிணத்துக்கடவு வட்டாரத்திற்குட்பட்ட அர சம்பாளையத்தில் ரூ.38.95 இலட்சம் மதிப்பீட்டில் கட் டப்பட்டுள்ள துணை சுகாதார நிலைய கட்டடமும் என மொத்தம் ரூ.1.38 கோடி மதிப் பீட்டில் கட்டப்பட்டுள்ள சுகா தார நிலைய கட்டடங்களை திறந்துவைத்தார்.

பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா!

மதுரவாயல் 91வது வட்டத்தில் நல உதவிகள்!

காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

சென்னை, செப்.15

மதுரவாயல் 91-வது வட் டத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்த நாளை முன் னிட்டு சென்னை தெற்கு மாவட்ட மருத்துவ அணி சார்பில் சென்னை தெற்கு மாவட்ட மருத்துவ அணி சார்பில் மாவட்ட மருத்துவ அணி துணைத்தலைவர் டாக்டர் எம்.எஸ்.அழகிரி ஏற்பாட்டில் மருத்துவ உப கரணங்கள் இன்று (15.9.2023) காலை 91வது வார்டு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வழங்கப் படுகிறது. நிகழ்ச்சிக்கு வட் டச் செயலாளர் எம்.கே.பி. அண்ணாதாசன் தலைமை வகிக்கிறார்.

ஆ.மாலினி எம்.சி., எம். எம்.ஜெயரத்தினம், எம்.ஏ. செந்தில் சுரேஷ், கே.குமரே சன், எம்.சி. எழிலரசு ஆகி யோர் முன்னிலை வகிக்கின் றனர்.

மருத்துவ உபகரணங் களை காரம்பாக்கம் க.கண பதி எம்.எல்.ஏ. வழங்குகி றார். இதில் டாக்டர் கனிமொழி சோமு, டாக் டர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., நொளம்பூர் வே.ராஜன், பி.கே.மூர்த்தி, டாக்டர் என்.அனீஸ், டாக் டர் ராம்குமார் மற்றும் பலர் கலந்துகொண்டு சிறப் பிக்கின்றனர்.

'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்!' குறித்து

'தி இந்து' நாளேட்டில் - நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு கட்டுரை!

முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

சென்னை, செப். 15-

"கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்" குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

எல்லாருக்கும் எல்லாம் என்ற இலக் கில் இந்திய மாநிலங்கள் அனைத்திற் கும் முன்னோடியாக, தேர்தல் வாக்குறு தியில் சொன்னபடி, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், நாளை பேரறிஞர் அண்ணா பிறந்தநாளில் தொடங்கப் பட்டு, ஒரு கோடியே 6 லட்சத்து 50 ஆயி ரம் குடும்பத்தலைவிகள் இனி மாதம் தோறும் பயன்பெற உள்ளனர்.

மகளிர் நலத் திட்டங்களில் புது அத்தி யாயமான இத்திட்டம் குறித்தும், மாநி லத்தின் நிதிநிலையை மேம்படுத்துவ தில் நமது அரசு கொண்டுள்ள உறுதியை வெளிப்படுத்தியும் மாண்பு மிகு நிதியமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் இன்றைய 'தி இந்து' நாளேட் டில்...

Tamil Nadu takes a historic leap with the Kalaignar Magalir Urimai Scheme, offering 1000 monthly assistance to

'Kalaignar Magalir Urimai Thogai scheme is data-driven, one of its kind in country'

1,06,50,000 women family heads. A groundbreaking initiative reshaping women's welfare in India, which is set to inspire many other states. The visionary Finance Minister of TN, Thiru. Thangam Thenarasu, sheds light on the pioneering KMUT scheme and our government's commitment to improving the finances of the state in today's The Hindu.

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டி யுள்ளார்.

திருக்கோயில்களுக்குச் சொந்தமான

1,50,001-வது ஏக்கர் நிலத்தை அளவீடு செய்யும் பணி!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

சென்னை, செப்.15

திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களை அளவீடு செய்யும் பணிகளில் 1,50,001 வது ஏக்கர் அளவீடு செய்யும் பணியினை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்.

இது குறித்து அரசு வெளி யிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டி லுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களை பாதுகாத்திடும் வகையில் ஆக் கிரமிப்புகள் அகற்றப்பட்டு வருவதோடு, நவீன தொழில் நுட்ப கருவிகளின் மூலம் அளவீடு செய்து எல்லைக் கற் கள் பதிக்கும் பணி முழு வீச் சில் நடைபெற்று வருகிறது.

அதன் தொடர்ச்சியாக இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு நேற்று (14.09.2023) தரு மபுரி மாவட்டம், கோபாலம்பட்டி, பேட்ராய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான 2.93 ஏக்கர் நிலத்தினை அளவீடு செய்த தன் மூலம் 1,50,000 ஏக்கரை நிறைவுசெய்து, 1,50,001வது ஏக்கரை நில அளவீடு செய் யும் பணியினை தொடங்கி வைத்தார்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு செய்தியாளர்களிடம் பேசியதாவது:-

திருக்கோயில்களுக்கு சொந்தமான நிலங்களை பாதுகாக்கும் பொருட்டு நவீன தொழில்நுட்ப கருவி யான DGPS ரோவர் மூலம் மயிலாப்பூர், கபாலீசுவரர் திருக்கோயிலில் 08.09.2021 அன்று நில அளவீடு செய்யும் பணி தொடங்கப்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டம், தி ரு ப் பு லி வ ன ம் , வி யா க்ர பு ரீ சு வ ர ர் திருக்கோயிலுக்குச் சொந்த மான நிலத்தினை அளவீடு செய்யும்போது 50,000 ஏக் கரை நிறைவு செய்தோம். அதனை தொடர்ந்து பெரிய பாளையம், பவானி அம்மன் திருக்கோயில் நிலத்தினை அளவீடு செய்து 1,00,000 ஏக் கரை எட்டினோம். இன் றைய தினம் தர்மபுரி மாவட் டம், கோபாலம்பட்டி கிராமம், பேட்ராய சுவாமி திருக்கோயிலுக்கு சொந்த மான 2.93 ஏக்கர் நிலத்தினை அளவீடு செய்வதன் வாயி லாக 1,50,000 ஏக்கரை நிறைவு செய்து, 1,50,001வது ஏக்கரை தொடங்கி வைத்து எல்லை கற்களை நட்டு பாது காத்துள்ளோம்.

அதனைத் தொடர்ந்து, அதியமான்கோட்டை, கால பைரவர் சுவாமி திருக்கோயிலில் ஆய்வு மேற்கொண்டோம். அங்கு பக்தர்கள் தெரிவித்த கோரிக் கைகளான திருமண மண்ட பம், குடிநீர் வசதி, கழிவறை வசதி மற்றும் தேய்பிறை அஷ் டமி தினத்தில் நடைபெறு கின்ற காலபைரவர் வழிபாட் டின் போது விளக்கு ஏற்றுகின்ற வகையில் விளக் கேற்றும் இடம் உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்த உரிய நட வடிக்கைகள் மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுரை கள் வழங்கப்பட்டுள்ளது.

கடந்தாண்டு சட்டமன் றத்தில் அறிவித்த அறிவிப் பின்படி, தருமபுரி, கோட் ட க் கே ா யி ல் மல்லிகார்ஜுனஸ்வரர் மற் றும் பரவாசுதேவர் திருக்கோ யில் திருப்பணியானது மண் டல மற்றும் மாநில வல்லுநர் குழுக்களின் ஒப்புதல் பெறப் பட்டு, ரூ.1.55 கோடி மதிப் பீட்டில் பணிகள் மேற் கொள்ள இடெண்டர் கோரப்பட்டுள்ளது. டெண் டர் உறுதி செய்யப்பட்ட பின் விரைவாக பணிகள் மேற்கொள்ளப்படும்.

மேலும், இன்றைய தினம் ரூ.14.5 இலட்சம் மதிப்பீட் டில் திருத்தேர் திருப்பணி தொடங்கி வைக்கப்பட்டுள் ளது. இத்திருத்தேர் பணி களை நிறைவுசெய்து, வரு கின்ற தை மாதத் திருவிழாவின்போது வீதி வுலா வருவதற்கு உரிய நடவ டிக்கைகள் மேற்கொள்ளப்ப டும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் தர்மபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கி.சாந்தி, சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்க டேஸ்வரன், முன்னாள் சட் டமன்ற உறுப்பினர் தடங்கம் பெ.சுப்பிரமணி, இந்து சமய அறநிலையத்துறை தனி அலு வலர் (ஆலய நிலங்கள்) ஜி.விஜயா, மண்டல இணை ஆணையர் வே.சபர்மதி, தரு மபுரி மாவட்ட அறங்காவலர் குழுத்தலைவர் பெ.கௌத மன், தருமபுரி உதவி ஆணை யர் மா.உதயகுமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண் டனர்.